மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.32/2020

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி மரியகிளாரா(DW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.29.02.2024</u>
<u>பி.வா.சா.1</u>
<u>குறுக்கு விசாரணை</u>

வாதி எனது கொழுந்தனார். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை நான் படித்து பார்த்துள்ளேன். வழக்கை தாக்கல் செய்தபின்பு, வீட்டை காலி செய்யசொல்லி வாதி புகார் கொடுத்தார் என்றால் இல்லை. அதனால்தான் வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக 01.09.2020 தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் இல்லை. வழக்கோடு வாதி எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்ற விபரத்தினை படித்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. ஞானபிரகாசம் எனது மாமனார். மரிய செல்வராணி எனது மாமியார். எனது கணவர், வாதி, ஆரோக்கிய சகாய லதா ஆகியோர் எனது மாமனாருக்கு வாரிசுகள். எனது கணவர் இறந்துவிட்டார். எனக்கு மரியகேமா, ராபின் ஆகிய இரண்டு குழந்தைகள் உள்ளது. ராபின் மேஜர். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது ராபின் மைனர் ஆவார். அதனால் நான் காப்பாளராக காட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது மாமனார் ஞானபிரகாரசம் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் ஓ.எஸ்.54/2014 வழக்கை இந்த வழக்கில் கண்ட 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் சமரசமாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி குடியிருந்து வரும் வீட்டை வாதி அடைந்துககொள்ள வேண்டும் என்றும், மீதமுள்ள நானும், எனது மக்களும் அடைந்து கொள்ள வேண்டும் என்றுதான் சமரசம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மாமனார், எனது மாமியாருக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அனைத்தையும் 19.09.2011 தேதியில் செட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை எனது தூண்டுதலின்பேரில் 01.11.2011ம் தேதி ரத்து செய்யவைத்தேன் என்றால் சரியல்ல. அந்த ரத்து பத்திரம் செல்லாது என சொல்லிதான் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நான் எழுதி வாங்கியது செல்லாது என்று எனது மாமனார் ஓ.எஸ்.54/2014 வழக்கு தாக்கல்

செய்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கின் கோப்பை பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். எனது நாத்தனார் ஆரோக்கிய சகாயலதா இறந்துவிட்டார். அவரது கணவர் செல்வராஜ் என்றால் சரிதான். அவருக்கு ஒரே ஒரு பெண்பிள்ளை மரிய டயானா என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் தாவா 1வது இலக்க சொத்து, வாதி குடியிருந்து வரும் வீடு எனது மாமாவுக்கு மட்டும் பாத்தியம். மற்ற சொத்துக்களில் எல்லோருக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. எனக்கும், மரிய டயானா என்பவருக்கும் கருத்து விரோதம் இல்லை என்றால் சரிதான். எனது மாமனார் கடைசிவரை வாழ்ந்த வீடு செம்மமடம் கதவு எண்.14/67 என்றால் சரிதான். அந்த வீட்டில் இன்றுவரை வாதியும், அவரது குடும்பமும் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். நான் செம்மமடத்தில் அதே தெருவில் வேறு வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் நாங்கள் எல்லோரும் ஒன்றாகதான் இருந்தோம். அந்த வீட்டில் எல்லோரும் ஒன்றாக இருந்ததற்கு ஆதார்கார்டு, ரேசன்கார்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக செம்மடம் கதவு எண்.14/67 வீட்டில் நான், எனது மாமனார், எனது மாமியார் குழந்தைகள் குடியிருந்து வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. அதனால்தான் அதற்கான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்